முருகப்பெருமான் துணை

**மகான் பூசலார் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.03.2023, செவ்வாய்கிழமை

1. பொறிபுலன் வழி சென்றலையா
   புலனடக்கம் மனவடக்கம் தந்து
   அறியாமை போக்கி ஞானபலம்
   அகிலத்தார்க்கு அருளவந்த ஞானியே
2. ஞானியே அரங்கனே உன் பெருமைகூறி
   ஞாலமதில் சுபகிருது சேல்திங்கள்
   இனிமைபட சப்தமதிகதி குஜன்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 07 ம் நாள், 21.03.2023, செவ்வாய்கிழமை)
   இயம்புவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை பூசலார் யானும்
   அகிலத்தார் பண்புற உரைப்பேன்
   வாசிவெல்லும் உயர் யோகமும்
   வல்லமையான சர்வ யோகமும் அடைய
4. உரைக்கவே அரங்கன் காட்டும்
   உயர் நெறி ஞானிகள் பூசை
   திரை வெல்லும் மார்க்கமாகும்
   தொடர்ந்து மக்கள் பின்பற்ற
5. பின்பற்ற மனமாயை அகலும்
   பீடை சோடை அனுகிடாத
   இன்பமான ஞான பலமாகியே
   எல்லாம் இறைசெயல் எனும் சரணாகதி
6. சரணாகதி நிலை பெருகி
   சாந்தம் பக்குவமான நடத்தை
   பூரணத்துவ மாந்தர்களாகியே
   புண்ணிய அன்னதான சேவை
7. சேவையையும் தேர்வு செய்து
   செப்பிடுவேன் சர்வ பலமுமாக
   அவனியில் அன்னதான சேவைஆற்றி
   ஆற்றல்மிக்க தருமவான்களாவர்
8. ஆகவே இந்தநிலை பெருகிட
   அகந்தை சுயநல வழிகளும்
   வகையறியா வென்று சிறந்து
   வள்ளல் தன்மை அடைவர்
9. அடைவர் வாழும் காலமே
   அகத்துள் ஞான சோதியை
   தடையற கண்டுத் தேறி
   தனிப்பெருங்கருணை வடிவாக

10. ஆகவே உலகோர்க்கு சேவை
    அளவிலா ஆற்றிச் சிறந்து
    மகான்கள் மகா சக்திகள் மெச்ச
    மகத்துவம் பலகண்டு தேறுவர்
11. தேறியே தேசம் எங்கிலும்
    தெய்வ ஞான ஆட்சிபடைப்பர்
    ஆறுமுகனார் ஆசிபட நடத்துவர்
    அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–